மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

# வாலாஜாபேட்டை நகராட்சி

## நகரமன்ற அவசரக் கூட்டம்

## வாலாஜாபேட்டை நகராட்சியில் 2021-ம் வருடம் ஜனவரி மாதம் 19-ந் தேதி செவ்வாய்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**முன்னிலை: திரு.ப.சதீஷ் குமார்,பி.பார்ம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

## மன்றப் பொருள்கள்

1. இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களில் கீழக்கண்டுள்ள குத்தகை இனங்களை ஒவ்வொரு ஆண்டுக்கும் குத்தகை தொகையில் 5% உயர்வின் அடிப்படையில் 01.04.2021 முதல் 31.03.2024 முடிய முன்றாண்டு காலத்திற்கு அனுபவித்து கொள்ள குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ள முன்வைப்புத்தொகை மற்றும் காப்பு தொகை நிர்ணயம் செய்துள்ளவாறு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைககப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | செலுத்த வேண்டிய ஏலக்கேள்வி பொறுப்புத்தொகை (வங்கி வரைவோலை/ரொக்கம்) | 01.01.2021-க்கு பிறகு வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டு சமர்ப்பிக்க வேண்டிய சொத்து மதிப்பு சான்று | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் ஏலப்பொறுப்புத் தொகை வங்கி வரைவோலை/ரொக்கம் | குத்தகை காலம் (ஆண்டு ஒன்றுக்கு 5% உயர்வின் அடிப்படையில்) |
|---|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குள் விற்பனைக்கு வரும் குறிப்பிட்ட இனங்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் நகரில் தற்காலிக கடைகளில் வைத்து வியாபாரம் செய்பவர்களிடமிருந்து தினசரி அடிப்படையில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமை. (நாளங்காடிக்குள் உள்ள தற்காலிக கடைகள் நீங்கலாக) | 2,50,000/- | 10,00,000/- | 5,00,000/- | 3 ஆண்டு காலத்திற்கு |
| 2 | வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் நகராட்சி நவீன கட்டண கழிப்பிடத்திற்கு சுங்கக் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமை. | 1,00,000/- | 7,00,000/- | 2,00,000/- | 3 ஆண்டு காலத்திற்கு |
| 3 | தினசரி நாளங்காடியில் உள்ள 99 கடைகளில் வாடகை வசூலித்துக் கொள்ளும் உரிமை மற்றும் நாளங்காடிக்குள் மக்கள் நடமாட்டத்திற்கு இடையூறின்றி இயங்கும் தற்காலிக கடைகளுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 2,50,000/- | 10,00,000/- | 5,00,000/- | 3 ஆண்டு காலத்திற்கு |
| 4 | வாலாஜாபேட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் தொட்டியில் சுங்கக்கட்டணம் வசூலிக்கும | 1,00,000/- | 7,00,000/- | 2,00,000/- | 3 ஆண்டு காலத்திற்கு |

| | |
|---|---|
| | <u>அலுவலககுறிப்பு:</u><br>1)மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களை மூன்று ஆண்டுகளுக்கு 01.04,2021 முதல் 31.03.2024 வரையான காலத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்<br>2) ஏல அறிக்கையினை தயார் செய்திட ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:0045 /2021/அ1) |

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**நகரமன்ற சாதாரணக் கூட்டம்**

**வாலாஜாபேட்டை நகராட்சியில் 2021-ம் வருடம் ஜனவரி மாதம் 29-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணியளவில் நகரமன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை: திரு.ப.சதீஷ் குமார்,பி.பார்ம்., அவர்கள்**

**தனி அலுவலர்**

**மன்றப் பொருள்கள்**

| | |
|---|---|
| 1 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ளபடி Special Road Programme 2020-21-ம் ஆண்டு திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி அளித்துள்ள ஒதுக்கீட்டின்படி தார் சாலைகளுடன் கூடிய கால்வாய்கள் மற்றும் கல்வெர்ட்டுகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு **ரூ.100.00** இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 12.01.2021 அன்று மின்னணு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மின்னணு ஒப்பந்த்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.<br>மேற்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப தகுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் 20.01.2021 அன்று திறக்கப்பட்டது. மேலும், மதிப்பீடு விகிதத்திற்கு கூடுதலாக 4.90% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.K.Rajaram & Co, Arcot, அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:1159/2020/இ1, நாள்:-21.01.2021ல் மேற்படி விலை விகிதங்கள் குறைத்து கொடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் தனது 25.01.2021ந் தேதிய கடிதத்தில் தற்சமயம் அரசு நிர்ணயித்த விலையை காட்டிலும் கட்டுமான பொருட்களின் விலை மற்றும் வேலை ஆட்களின் கூலி அதிகமாகவுள்ளதாகவும், எனவே ஒப்பந்தப்புள்ளியில் விலையை குறைத்து கொடுக்க இயலாது எனவும், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்குமாறும் கோரியுள்ளார். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது. |

| வ. எண் | பணியின் பெயர் | M/s.K.Rajaram & Co, No.31,Police Line Street, Arcot.632503 Ranipet Dist. | Mr. A.M.Hari, No.32A, Chinna Street, Ammoor |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06, காமாட்சிபுரம் 1&2 பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய தார்சாலை, வார்டு எண்.09, த.நா.வீ.வ.வாரியம் 3வது பிரதான சாலையில் தார் சாலை, வார்டு எண்.09, த.நா.வீ.வ.வாரியம் 4வது குறுக்கு தெருவில் தார் சாலை, வார்டு எண்.17, இந்திரா நகர் பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய தார்சாலை, வார்டு எண்.18,காமராஜர் தெருவில் தார்சாலை, வார்டு எண்.21, | மதீப்பீட்டை விட +4.90% கூடுதலாகவும் | மதீப்பீட்டை விட +7.80% கூடுதலாகவும் |

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td></td><td>காந்திநகர் பகுதியில் தார்சாலை, வார்டு எண்.23, லாலாபேட்டை தெத்து தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய தார்சாலை அமைக்கும் பணிகள்</td><td></td><td></td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1.மேற்படி பணியினை குறித்த காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதாலும் மதிப்பீட்டை விட 4.90% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.K.Rajaram & Co, No.31,Police Line Street, Arcot.632503, Ranipet Dist, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.<br>
<u>(ந.க.எண்:1159/2020/இ1).</u>
</td></tr>
<tr><td>2</td><td>
அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.09.2020ல் தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பொது முழு ஊரடங்கு காலத்தில் நகராட்சி பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் (ம) குத்தகை கடைகள் 01.04.2020 முதல் 31.05.2020 வரையில் செயல்படாத குத்தகை இனங்களின் கேட்பு மற்றும் கடைகளின் கேட்பு தள்ளுபடி செய்ய உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.8763/2020/ஆர்2. நாள்.29.09.2020ல் தெரிவித்துள்ளதற்கிணங்க, தற்போது இந்நகராட்சியின் வரியில்லா இனங்களில் மொத்தமுள்ள கடைகளின் கேட்பின் விவரங்கள் வருவாய் ஆய்வர்(பொ) மற்றும் வருவாய் உதவியாளர்கள் ஆய்வு செய்து கடைகள் மற்றும் கேட்பு விவரங்கள் பெறப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்டுள்ள பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, பட்டியலில் கண்டுள்ள கடைகள் மற்றும் குத்தகை இனங்களின் கேட்பினை 01.04.2020 முதல் 31.05.2020 வரை தள்ளுபடி செய்யவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2) அரசாணையின்படி பட்டியலில் கண்டுள்ள கடைகள்/குத்தகை இனங்களின் கேட்பினை (01.04.2021 முதல் 31.05.2021 வரையில்) தள்ளுபடி செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
(ந.க.எண்.270/2020/அ1)
</td></tr>
<tr><td>3</td><td>
இந்நகராட்சி சார்பாக கொரோனா வைரஸ் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கொரோனா நோய் கண்ட நபர்கள் தங்கியுள்ள AAA கல்லூாியில் உள்ள வார்டுகளை சுத்தம் செய்யும் பணிக்கு 5 எண்ணிக்கை தனிநபர்களை கொண்டு சுத்தம் செய்யும் பணிக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரையின்படி, மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் அவசர அவசியம் கருதி பணி அமர்த்தப்பட்டது. மேற்படி பணியாளர்களுக்கு 01.07.2020 முதல் 31.08.2020 வரையிலான காலத்திற்கு ஊதியம் வழங்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/-க்கு (ருபாய் ஒரு இலட்சம்) மன்ற அனுமதி பெற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1)அவசர அவசியம் கருதி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரையின்படி ஐந்து பணியாளர்கள் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நியமனம் செய்து பணிமேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>
2)மேற்படி செலவினத்திற்கான தொகை பொதுநிதியில் இருந்து வழங்கி பின் COVID-19 நிதியில் அல்லது மாவட்ட ஆட்சியர் அளிக்கும் நிதியில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3.மன்றத்தலைவரின் முன்னனுமதி பெற்று தொகை வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td></tr>
</table>

| | |
|---|---|
| 4 | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் முதல் நிலை குப்பை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் LCV வாகனம் எண்:TN73P6237-யில் ரேடியேட்டர், பேன், செல்ப்மோட்டார் மற்றும் சேன்சார் போர்டு பழுதடைந்து வாகனம் இயக்குவது சிரமம் ஏற்படுகின்றது எனவும் மேற்படி வாகனம் பழுது நிவர்த்தி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.50000/-க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>மேற்படி வாகனம் பொதுசுகாதாரப்பணிக்கு தினசரி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்த வேண்டியுள்ளதினாலும் திடக்கழிவு மேலாண்மை பணி பாதிக்காமல் இருக்க மேற்படி பழுதுகளை அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| 5 | வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் ஆண்டு திறந்தவெளி கழிப்பிடம் கட்டும் பணியினை மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது நகரில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது, தற்போது திறந்தவெளி இடங்களில் மலம் கழிக்கும் நிலை இல்லையென்றும் அடுத்த சான்று (ODF+) பெற பொதுமக்களிடம் ஆலோசனைகள் பெற விளம்பரம் தினமலர் நாளிதழில் 30.10.2020 விளம்பரம் செய்யப்பட்டதற்கு கட்டணமாக பட்டியல் தொகை ரூ.3776/- + 188/- = ரூ.3965/- (G.S.T உட்பட) செலுத்த வேண்டும் என பட்டியல் வரப்பெற்றுள்ளது, பட்டியல் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>பட்டியல் தொகை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்:1155/2020/எச்1) |
| 6 | வாலாஜாபேட்டை நகராட்சியில் 2018-ம் ஆண்டு திறந்தவெளி கழிப்பிடம் கட்டும் பணியினை மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது நகரில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது, தற்போது திறந்தவெளி இடங்களில் மலம் கழிக்கும் நிலை இல்லையென்றும் அடுத்த சான்று (ODF+) பெற பொதுமக்களிடம் ஆலோசனைகள் பெற விளம்பரம் தினத்தந்தி நாளிதழில் 30.10.2020 விளம்பரம் செய்யப்பட்டதற்கு கட்டணமாக பட்டியல் தொகை ரூ.3968/- + 198/- = ரூ.4166/- (G.S.T உட்பட) செலுத்த வேண்டும் என பட்டியல் வரப்பெற்றுள்ளது, பட்டியல் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br>பட்டியல் தொகை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்:1155/2020/எச்1) |
| 7 | வாலாஜாபேட்டை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் இராண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் TRANSPORATION செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, குப்பையில்லா நகராட்சியாக மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற சுய உறுதிமொழி சான்றிதழ் அனுமதித்து மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நகராட்சி பொதுமக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் மற்றும் கருத்துகள் இருப்பின் ஆணையாளர் தெரிவிக்க தினமலர் நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டது. 10.11.2020 விளம்பரம் செய்யப்பட்டதற்கு கட்டணமாக பட்டியல் தொகை ரூ.4720/- + 236/- = ரூ.4956/- (G.S.T உட்பட) செலுத்த வேண்டும் என பட்டியல் வரப்பெற்றுள்ளது, |

பட்டியல் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பட்டியல் தொகை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:1212/2020/எச்1)

8 இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் முதல் நிலை குப்பை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் LCV வாகனம் எண்:TN73P6237-யில் ரேடியேட்டர், பேன், செல்ப்மோட்டார் மற்றும் சேன்சார் போர்டு பழுதடைந்து வாகனம் இயக்குவது சிரமம் ஏற்படுகின்றது எனவும் மேற்படி வாகனம் பழுது நிவர்த்தி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.50000/-க்கு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | The Tirupattur Agro Engineering & Service Co-op. Centre Ltd. V.G.14, Tirupattur. | 52,390/- |
| 2 | The Katpadi Agro Engineering & Service Co-op. Centre Ltd. V.G.12, Tirupattur. | 52,390/- |
| 3 | The Walajapet Agro Engineering & Service Co-op. Centre Ltd. V.V.2664. Walajapet.. | 46,340/- |

மேற்படி, வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்:3-ல் கண்டுள்ள The Walajapet Agro Engineering & Service Co-op. Centre Ltd. V.V.2664. Walajapet..அவர்களின் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1)மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2)மேற்படி, செலவினத்தை 2010-21-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3)வரிசை எண்:3-ல் கண்டுள்ள The Walajapet Agro Engineering & Service Co-op. Centre Ltd. V.V.2664. Walajapet.. அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்றுநடவடிக்கை மேற்கொண்டமைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்

9 வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட இடங்களில் முடித்திருத்தம்/அழகு நிலையம்/ஸ்பா/மசாஜ் நிலையம் நடத்துவோர் சம்மந்தப்பட்ட நகராட்சியால் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று, இவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு(JJ) மற்றும் (JJJ)-ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 2490ன்படி தவறாமல் உரிமம் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. தவறும்பட்சத்தில், தங்களது தொழில் உரிமம் இன்றி செயல்படுவதாக கருதி நிலையம் நடத்துவோரும், நிலைய உரிமையாளரும் பொறுப்பானவராக கருதி நிலையத்தை மூடி முதகிரையிடுதல், உள்ளிட்ட அனைத்து சட்ட பூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு சட்டம் V/1920-ன் கீழ் மேற்கொள்ளப்படும் என விளம்பரப்படுத்தவும், விளம்பர பட்டியல் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:1350/2020/எச்1)

| | |
|---|---|
| 10 | இந்நகராட்சியில் பணிகள் அனைத்தும் UTIS தொகுப்பின் மூலம் நடைப்பெற்று வருகின்றது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், வேலூா் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கடித விவரங்கள் அறிந்து எடுப்பதற்கான Internet Connectivity மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக RAIL WAY DEPARTMENT மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் மூலமாக 2018-ம் ஆண்டில் இருந்து செயல்படும் நிறுவனத்தின் மூலம் இந்நகராட்சிக்கு இணையதள இணைப்பை RKS CABLE (Rail wire internet) நிறுவனத்தின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது மேற்படி இணைப்பு பெறப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருவதற்கு 01.01.2020 முதல் 31.12.2020 வரையிலான ஓர் ஆண்டு காலத்திற்கு Rail wire Internet Connectivity கட்டணத்திற்கு ரூ.3600 வீதம் 12 மாதங்களுக்கு மொத்தம் ரூ.43200/-க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளதை, மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி சேவையை Rail wire நிறுவனம் அங்கீகாரம் பெற்ற RKS CABLE அவர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:609/2018/சி1) |
| 11 | Special Road Programme-2020-21ம் ஆண்டு திட்டத்தின் கீழ் தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி 12.01.2021 அன்று கோருவதை முன்னிட்டு மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் 27.12.2020 அன்று விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.65,419/- வரப்பெற்றதன் பேரில் மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 2021-22ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்தும் மற்றும் Special Road Programme-2020-21ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியின் கீழ் செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) Accord Advertising Agencies, Chennai-34 அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1159/2020/இ1) |

தனிஅலுவலர்(ம)ஆணையர்,
வாலாஜாபேட்டை நகராட்சி.